RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22448

OPEN ACCESS

# இலக்குமிகுமாரன் ஞானதிரவியம் சிறுகதைகளில் சமூக வெளிப்பாடும் புனைவெளி நுட்பமும்

**க. முருகானந்தம் [அ, *], பெ. கண்ணன் [அ]**

[அ] தமிழ்த்துறை, அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி), பூண்டி-613503, தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

# Social Expression and Fictional Technique in Short Stories of Ilakumikumaran Gnanathiraviyam

**G. Muruganandham [a,*], P. Kannan [a]**

[a] Department of Tamil, A.V.V.M. Sri Pushpam College, Poondi-613503, Thanjavur, (Affiliated to Bharathidasan University, Tiruchirappalli), Tamil Nadu, India

* Corresponding Author: gsganamurugan@gmail.com

Received: 13-06-2022
Revised: 23-09-2022
Accepted: 07-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

A short story is one that focuses on an event or emotion that occurs in life. A short story is something that is written in stages. Short stories have the power to understand the reader's mindset and to accurately illustrate the joys and sorrows of life. The short stories were able to narrate the life events of the people of the party. Pointing out biological techniques most accurately. The field of fiction that is evident in these short stories is able to polish the story structure. Thus, this review article sets out to explore the fictional techniques found in the author's encyclopedias short story collection 'Kazhalai'.

**Keywords:** Anger, Chanting, Gurus, Club Celebrations, Imprisonment, Depravity, Idiom, Trend, Folk Worship, Stress

## முன்னுரை

மனிதகுல வரலாற்றில் கதை சொல்லுவது என்பது மரபு ரீதியான ஒன்றாகும். மனிதன் தன் அனுபவங்களை அடுத்தவர்க்கும் அடுத்த தலைமுறையினர்க்கும் சொல்கிறான். தமிழில் வ.வே.சு. ஐயர் எழுதிய 'குளத்தங்கரை அரசமரம்' என்னும் கதைதான் தமிழில் முதல் சிறுகதை என்றும், கதைக்குரிய இலக்கணத்தோடு அது அமைந்தது என்றும் கூறுவர். தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மணிக்கொடி பத்திரிக்கையின் பங்கு அளப்பரியது. சிறுகதை மன்னன் என்று அழைக்கப்பட்ட புதுமைப்பித்தனின் பெரும்பாலான கதைகள் மணிக்கொடி பத்திரிக்கையில் தான் வெளிவந்தன. அவரோடு கு.ப.ரா., சி.சு. செல்லப்பா, மௌனி, க.நா. சுப்பிரமணியன் போன்ற எழுத்தாளர்களும் மணிக்கொடியால் சிறப்பு பெற்றனர்.

வாழ்வின் எந்த சிறிய நிகழ்வும் கதையின் கருப்பொருளாக அமையும். சமூக ஏற்றத்தாழ்வு, பொருளாதார பிரச்சினை, கடவுள் வழிபாடுகள், பழக்கவழக்கங்கள், மதவாத அரசியல், சாதிய அமைப்புகள், வறுமை என எல்லாவற்றையும் வாசகனின் உணர்வை, ஆன்மாவைத் தொடக்கூடியதாக அமைந்தால் அச்சிறுகதை மிகச் சிறப்பாக பேசப்படும். தொடக்ககாலச் சிறுகதைகள் கடவுள் பக்தி, நீதி, அறம் பற்றியக் கருத்துக்களைக் குறிப்பிடும் நோக்கில் எழுதப்பட்டன. விடுதலைக்குச் சற்று முந்திய

காலத்தில்தான் வாழ்வின் எதார்த்த நோக்கில் சிறுகதை எழுதும் போக்கு உருவானது என்பர். சமுதாய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு புரட்சிகரமான சிறுகதை எழுதியவர்களில் ஜெயகாந்தன், ஜானகிராமன், கு. அழகிரிசாமி, பிரபஞ்சன் போன்றோர் குறிப்பிட தகுந்தோர் ஆவார் (Subbaiya, 2006).

அந்த வகையில் ஞானதிரவியம் அவர்களின் கழலைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு சிறுகதையும், வாசகனின் எண்ணவோட்டத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. நம் பக்கத்து வீட்டில், நாம் கவனித்து அவதானிப்பது போன்று கிராம மக்களின் எளிய பேச்சுநடையில் அவர் கதை சொல்லும் விதம் அலாதியானது. தஞ்சை மாவட்ட விவசாய பெருங்குடிகளின் பேச்சுவழக்கு கதைக்கு அழகூட்டுகிறது.

சமுதாயம் என்பது மக்கள் ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையாகும். அந்த வாழ்க்கை ஒற்றுமையால் ஆக்கப்பட்டதா எனில் இல்லை என்று உரக்கச் சொல்லலாம். மதத்தால், சாதியால், பணத்தால் மக்கள் பிளவுபட்டு இருக்கிறார்கள் என்பதே உண்மை. நாம் வாழும் சமூகத்தின் அமைப்புகளை உற்றுநோக்கினால் அதில் பல்வேறு அடுக்குகள் நிறைந்து இருப்பதைக் காணலாம். ஆசிரியர் கழலைத் தொகுப்பில் அந்த அடுக்குகள் நிகழ்த்தும் பரிணாமங்களைப் புனைவெளி நுட்பமாக உணர்த்துகிறார்.

## புனைகதைகளில் சொல்லும் சொலவடையும்

பாமர மக்களின் உள்ளக்கிடக்கையில் ஆழ்ந்து விடும் சொற்கள் அம்புபோல் பாயும். இலக்கிய வடிக்காக அல்லாமல் சொல் வழக்குத்தான் பெருகி கிடக்கும். அதை ஆசிரியர் தக்க இடத்தில் பயன்படுத்தி இருப்பது கதைக்கு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஒரு சொல் காற்றில் போகிறது அல்லது அது சும்மா இருக்கிறது. ஆனால் ஒரு பழமொழியில் இயங்கும்போது அது அம்புபோலக் கூர் தீட்டப்பட்டு வருகிறது. அதே சொல் ஒரு நல்ல கவிஞரின் நல்ல கவிதைக்குள் நின்றியங்கும் போது ஒரு விதையைப் போலாகி விடுகின்றது. விதையென்றால் வெறும் தாவர விதையல்ல என்று கூறப்படுவது ஒரு சொல்லுக்கு எவ்வளவு வீரியம் உண்டு என்பதைக் காட்டுகிறது (Gnanadiraviyam, 2019). பேச்சுவாக்கில் உதிர்க்கும் சொலவடை (பழமொழி) கூட இடத்திற்குத் தகுந்தாற்போல் அமைந்துவிடுகிறது.

"பொண்டாட்டிய வெறட்டிவுட்டு உள்ளங்கையில

ஏதாச்சும் இருக்கான்னு பார்த்தானாம்

கொம்பால குருணிபாலு கறந்தாலும்

கூர புடுங்கற மாடு உதவாது"

போன்ற பழமொழிகள் கிராமத்து மக்களின் எளிய வாழ்வியலைக் கூறுகின்றது.

உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. மனிதர்களும் தங்கள் வாழ்வியலை, உணவுமுறையை மாற்றி கொண்டுவிட்டார்கள். ஒவ்வொரு நாளும் தங்களை பலமிக்கவர்களாகவும், பொருளாதார நிலையிலும், வலுவான நிலையில் வைத்துக் கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறது. அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கிறது.

நவீன வாழ்க்கை நமக்கு வழங்கியது சில கருவிகளையும் சில சிக்கல்களையும்தான். ஆனால் எங்கள் வாழ்வு அப்படியேதான் இருக்கிறது என்கிறோம். இதுவும் உண்மைதான் என்று ஏன் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில் அதிகாரம் எங்களிடம் இல்லை என்ற உண்மைதான் நிலைத்து நிற்கிறது. உலகம் ஓடிக் கொண்டிருக்கிறது. நின்று பேசவும், சிரித்து மகிழவும் கால அவகாசங்கள் கிடைப்பதில்லை. அல்லது அமைத்து கொள்ளப்படுவதில்லை. தாய்க்கும் பிள்ளைக்கும், தந்தைக்கும் மகள்களுக்கும்கூட சிறிய இடைவெளி பந்தம்தான் உண்டாகியிருக்கின்றது (Gnanadiraviyam, 2019).

இது ஒனக்கு மட்டுந்தாம் பிரச்சனையா...? இன்னைக்கு எல்லா அப்பனுக்குமே இதாம் பிரச்சனையே ஒரு அப்பனும் பிள்ளையோடப் பேச முடியலெ பயலுவ எல்லாந் நெலே இருக்காங்

இல்லென்னா அவய்ங்கெ அவய்ங்கெ செட்ல இருக்காங் சாயங்காலமானா எங்காச்சுங் கட கண்ணிக்கோ படத்துக்கோ போய்ட்றாய்ங்கெ அப்பங்கக்கூட அவய்ங்களுக்குப் பேச என்னா இருக்குச் சொல்லு என்று வெற்றிடம் சிறுகதையில் படைப்பாசிரியர் கூறுகிறார் (Gnanadiraviyam, 2019). குழந்தைகளை அதன் போக்கில் விட்டுவிட முடியாமல் கண்டிப்பும், அதே நேரத்தில் கொஞ்சம் சுதந்திரமாகவும் வளர்க்கப் பெற்றோர்கள் படும்பாடு படுதிண்டாட்டமாகவே இருக்கிறது. பல குடும்பங்களிலும் இந்நிலை நீடித்து வருவதை பார்க்க முடிகிறது.

ஒரு மனிதனுக்கு இரண்டே இரண்டு சவால்கள்தான் இந்த உலகில் இருக்கின்றன. ஒன்று வாழ்வது. இன்னொன்று அவன் பிள்ளைகள். எத்தனை பிள்ளைகளோ அத்தனை சவால்கள் என்று எண்ணியவாறு ஒரு தந்தை தன் வாழ்க்கையை நகர்த்துவதாக 'கொமரு' சிறுகதையில் எடுத்துரைத்துள்ளார்.

பெண்களைப் போல வெளிப்படையாக பதின்பருவத்தை அடைந்து விட்டது போல பையன்களுக்குத் தெரிவதில்லை. உடம்பில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்திலும் அவன் குழப்பமும், அதற்கான விடையும் தேடி குழம்பி தவிக்கிறார்கள். அவர்களைச் சரியாக வழிநடத்தப்பட்டால்ஒழிய நல்ல புரிதலோடு வளர்வதில்லை என்பதை தீயரும்பு கதையில் வரும் ஒரு பதின்பருவ சிறுவனின் மன வேகத்தை பிரதிமையாக்கியுள்ளார் (Gnanadiraviyam, 2019).

## நாட்டார் தெய்வ வழிபாடுகள்

நாட்டார் தெய்வ வழிபாடு என்பது சிறுதெய்வ வழிபாடு ஆகும். சிறுதெய்வ வழிபாட்டில் வீட்டுத் தெய்வ வழிபாடு, குல தெய்வ வழிபாடு, இனத்தெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு மற்றும் வெகுசனத் தெய்வ வழிபாடு எனப் பல வகைகள் காணப்படுகின்றன. இந்தத் தெய்வ வழிபாட்டு முறையில் பொதுவான இலக்கணங்களோ, வரைமுறைகளோ வகுக்கப்படவில்லை. அவை காலம்காலமாக முன்னோர்களால் செய்யப்பட்ட சடங்குகளை அடிப்படையாக வைத்துப் பின்பற்றப்படுகின்றன. உலகின் தொன்மையான இயற்கை வழிபாட்டுக்கு அடுத்துச் சிறுதெய்வ வழிபாடு இருப்பதாக முனைவர் க. தியாகராஜன் குறிப்பிட்டுள்ளார் (Thiyagarajan, 2005).

நாட்டுப்புறத் தெய்வங்கள் மக்கள் பண்பாட்டோடு ஒட்டி உறவாடுபவை. மக்களது வாழ்வியலின் அங்கமாக இருப்பவை. குறிப்பிட்ட வட்டாரத்தைத் தெரிந்து கொள்ளவோ, அவ்வட்டார மக்களை, இனங்காணவோ அடையாளமாக இருப்பவை நாட்டுப்புறத் தெய்வங்களேயாகும் (Poovannan, 2001).

'சிறைபாடு' என்ற சிறுகதையில் காலங்காலமாக வழிபாடு செய்துவரும் கிராம தெய்வங்களான காத்தவராயனுக்கும், காமாட்சி அம்மனுக்கும் புதியதாய்க் கோயில்கட்டி முடிக்கும்போது கிராமபூசாரி கொண்டு பூசை செய்வதா இல்லை பெருந்தெய்வ வழிபாடான கும்பாபிசேகம் செய்வதா என்று இரண்டு தரப்பினருக்கு வாக்குவாதம் எழுகிறது. இதனை,

“யாகசால போட்டு நல்லா மந்திரம் சொல்லிப் பத்துப் பதினஞ்சு குருக்களு வந்து மொறாப் பண்றதுதான் கும்பாபிசேகத்துக்கு அர்த்தமாயிக்கும். தமிழ்ல பண்ணா சாமி கும்பிட்ட மாதிரி இருக்காதென இளைஞர்கள் எதிர்வாதம் செய்தனர்” எனும் தொடர் தெளிவுறுத்துகிறது. எப்போது கிராம தெய்வங்கள் பெருந்தெய்வ வழிபாட்டில் செல்கிறதோ அப்போதே மக்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் நின்றுதான் வழிபாடு செய்ய முடியும். குருக்கள் வைத்தும் வழிபட்டால் ஒரு இடைவெளி ஏற்படும் என்பதை மறுத்து கிராம இளைஞர்களும், பெரியவர்களும் கும்பாபிசேகம் செய்தனர் என்பதையும் பதிவிட்டுள்ளார் (Gnanadiraviyam, 2019).

காலம் உருண்டோட அம்மா விருப்பப்படி மகளின் திருமண அழைப்பிதழைக் காத்தவராயனுக்கும், காமாட்சியம்மனுக்கும் வைக்கும் வழக்கத்தின்படி கோயிலுக்கு வரும்போது அவர்களைக் கோயில் குருக்கள் வெளியில் நிறுத்திவிட்டுப் பூசை செய்தபின்பு கோயிலைப்பூட்டிச் சாவியை இடுப்பில் செருகிக் கொண்டு குருக்கள் செல்கிறார். வணங்குபவருக்கும், குருக்களுக்குமான சமூக இடைவெளியை இவ்விடத்தில் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

“காத்தவராயனையும் காமாட்சியம்மனையும் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். கம்பிக் கதவுகளுக்கு அந்த பக்கமிருந்து வைத்தகண் இமைக்காமல் இவனையே பார்த்துக் கொண்டிருந்தனர் காத்தவராயனும், காமாட்சியம்மனும்” என்று கூறுவதனால் அறியலாம். இதனை, கம்பிக் கதவுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் காட்டப்படுகின்ற மனித இன வேறுபாட்டிற்கான அடையாளம் எனவும் கொள்ளலாம் (Gnanadiraviyam, 2019).

எளிமையான அவர்களுக்கு நெருக்கமான அங்காளி பங்காளியாக இருந்த காத்தவராயசாமியின் ஒற்றையடி வீடு மற்றும் கோயில் பிரமாண்டமாக மாறமாற அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் வெளியே நிறுத்தப்பட நேர்கின்றது என்பதையும் கதையில் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார். அவ்வாறே அதிகாரமும் மதமும் பிரிக்க முடியாத நாணயத்தின் இரு பக்கங்களாக அமைந்தியல்வதைச் "சிறைப்பாடு" சிறுகதை அருமையாகச் சித்திரிக்கின்றது.

## எதிர்காலப் புனைவும் நடப்பு நிகழ்வுகளும்

இன்றைய காலத்தில் கிராமங்கள் பெரும்பான்மையும் நகர்மயமாதல் என்ற நிலைக்குச் சென்று கொண்டிருப்பதால் நுகர்வு கலாச்சாரம் என்ற மாயை பெருகி கொண்டே செல்கிறது. தனிமனித ஒழுக்கம் என்பது குறைந்து சமுதாயச் சீர்கேடாக மாறிவரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. கிராமத்தில் இன்று இளவயது பிள்ளைகளும் சர்வசாதாரணமாக மது அருந்தும் பழக்கத்தை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்கள் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி வருவதையும் காணமுடிகிறது.

ஆரம்பத்தில் வெறும் ஆசையின் வெளிப்பாடாக மட்டுமே இருந்து பின்னர் நண்பர்களின் வற்புறுத்தலுக்காக மது அருந்தும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பின்பு அதில் தொடர்ந்து நாட்டம் ஏற்பட்டு குடிக்க ஆரம்பிக்கிறார்கள். நாளடைவில் இன்னும் அதிக அளவில் குடித்தால் தான் போதை ஏற்படும் என்கிற நிலை உருவாகும். குடிப்பவர்களில் 10 முதல் 20 சதவிகிதத்தினர் மதுவுக்கு அடிமையாகி விடுகின்றனர். இரத்தத்தில் 20 மில்லிகிராம் ஆல்கஹால் கலந்தாலே பார்வைத்திறன் குறையும். 30 மில்லிகிராம் என்ற அளவைத் தொட்டால் தசை தன் கட்டுப்பாட்டை இழக்கும். சிந்திப்பது, புரிந்து கொள்வது, மதிப்பிடும் தன்மை குறைவது என்று சங்கிலித் தொடர்போல் எல்லாம் பாதிக்கப்படும். உடல் அளவிலும், மன அளவிலும் குடிக்கு அடிமையாகிவிடுவதால் வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள் ஏற்பட்டாலும்கூட குடிப்பதை அவர்களால் நிறுத்த முடியாது. ஏனெனில் குடியை நிறுத்தும் போது கை நடுக்கம், தூக்கமின்மை, மனச்சோர்வு, சிந்திக்கும் திறன் பாதிப்பு, பயம், நரம்புத் தளர்ச்சி, தாம்பத்திய வாழ்க்கையில் பிரச்சினை, வயிற்றுப்புண், கல்லீரல் வீக்கம் என்று உடலின் எந்த உறுப்பையும் இந்தக் குடிநோய் விட்டு வைக்காது. அதனால்தான் குடியைப் பற்றி ஆழமான ஒரு விழிப்புணர்வையும், அதன் விளைவுகளையும் 'பன்னிற மாமை' என்ற சிறுகதையில் குறியீடாக பயன்படுத்தியுள்ளார்.

"அந்த பையனுக்கு இப்டிக் காதக் கொண்டாங்க... இந்திரியத்துக்குப் பதிலா சாராயத்தண்ணி வருதாங்"

"அப்றமென்னா பனங்கள்ளா வரும் அதாம் பத்தாங்கிளாஸ்லேர்ந்து குடிக்கிறானே. அதாந் வரும்."

"புள்ளக் குட்டிக்கு என்னா வழி" என்று மாமனார் கேட்க. அதாங் கெவர்மெண்டோட ஸ்பெர்ம் பேங்க் இருக்கே? இல்லாட்டி க்ளொனிங் ஃபெசிலிட்டி இருக்கே என்று சொல்லும் பேரனை இருவரும் வேற்று கிரகவாசியைப் போல வெறித்துப் பார்த்தனார். இதன்வழி எதிர்கால சந்ததி ஆராய்ச்சி நிலையத்திலேயே உருவாகும் என்ற உண்மையை எடுத்துரைப்பது நயமான பதிவாகும் (Gnanadiraviyam, 2019).

"ஊர்மிளை" என்ற இன்னொரு சிறுகதையில் வருங்காலத்தில் பெண்களும் சர்வசாதாரணமாக சகத்தோழிகளுடன் பார்களில் மதுவருந்தி அலுவலகத்தில் வேலைப் பார்க்கும் ஆண்களின் பழக்கவழக்கங்களைக் கலாய்த்துப் பேசிவிட்டு தள்ளாடியபடியே வீட்டிற்கு வருவது அவர்களையே நம்பியிருக்கும் அவர்களின் குடும்பம் எதிர்கொள்ளும் ஆதங்கத்தைத் தெரிவிக்கிறது.

## நவீன கல்வி நிலையங்களால் ஏற்படும் மனஅழுத்தங்கள்

கல்வி என்பது ஒருவன் தன் உள்ளத்தில் சேர்க்கும் அரியபொருள். அதைச் சேர்த்து விட்டால் உலகிலுள்ள மற்ற பொருள்களெல்லாம் தானே கிட்டும். ஒரு மனிதனின் வாழ்வில் அவனுக்குக் கண்ணாக இருப்பது கல்விதான். எனவேதான் 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது நாலடியார். கல்வி என்பது ஞானம் பெறுவதற்கும், தான் யார் என்ற தன்னிலை உணர்வதற்கும் என்ற நிலையிலிருந்து மாறி இன்று தன் சொத்துக்களை விற்றும், கடன் வாங்கியும், படிக்க வேண்டிய நிலை உள்ளது. அப்படி கல்விக்காகச் சொத்துக்களை விற்றவன், வேலையில்லாதவனாகக் கல்விக்கடன் வாங்கிக் கடனாளியாகவும், விரக்தியிலும், வேதனையிலும் தனக்கும், தன் குடும்பத்திற்கும் பெரும் சுமையாகின்றான். இன்றைய கல்வி ஒரு மனிதனை தன்னம்பிக்கை இல்லாதவனாகவும், மனிதத்தன்மை குறைந்தவனாகும் என இயந்திரதனமான நிலையைத் தான் தந்து கொண்டிருக்கிறது.

இந்த எம்.பி.பி. எஸ்., எஞ்சினியரிங் படிக்கிறவங்களுக்கெல்லாம் தத்துவம் ஒரு பேப்பர், அரசியல் ஒரு பேப்பர், வரலாறு ஒரு பேப்பர், அத்தோட வேல்யூஸ் உண்டாக்குற மாதிரி நல்ல லிட்ரேச்சர் ஒரு பேப்பர்னு வச்சு அதுல எடுக்கிற மார்க்கையும், வேல வெட்டிக்குப் போகும்போது எடுக்கணும் சார். வெறும் டெக்னீசியன்கள் மட்டும் உருவாக்கிவிட்டா அவங்க ரோபார்ட் மாதிரி வாழ்றாங்கெ சார் என்று ஆசிரியர் கூறுவது இங்கு நினைவுகூறப்பட்டது (Gnanadiraviyam, 2019). கல்வி என்பது மனிதனைப் பண்படுத்தும் ஒரு வழிமுறை. கல்விக்கூடம் என்பது பண்பென்னும் வழிமுறையை மனிதனுக்குக் கற்றுக்கொடுக்கும் ஒரு நிறுவனமாகும். கல்வி கற்றவர்கள், எந்த துறையிலும் ஜொலிக்கலாம். ஆனால் கல்வி அவர்களிடம் பண்பை வளர்த்திருந்தால் மட்டுமே அவர்கள் சிறந்த மனிதராகத் திகழமுடியும்.

நவநாகரிகக் கல்வி என்ற பெயரில் குழந்தைகளை அடக்கி ஒடுக்கி குதிரைக்குக் கடிவாளம் போட்டது போன்று வெறும் பாடங்களை மட்டுமே மனப்பாடம் செய்யும் கல்விமுறையை தனியார் கல்வி நிலையங்கள் செயல்படுத்தி வருகின்றன. அதனால் சில பல சமூக கொண்டாட்டங்களையும் தவிர்த்துவிடுகின்றன. பொங்கல் முதல் நாள் போகி அன்று பள்ளிக்கு விடுப்பு எடுத்ததிற்காக மாணவனின் பெற்றோரை பள்ளிக்கு வரச்சொல்லி அலைக்கழிப்பு செய்யும் தனியார் பள்ளித் தலைமையாசிரியரிடம் அறச்சீற்றத்துடன் தந்தை கதாபாத்திரம் உடையிடுவதே 'பொங்க' என்ற சிறுகதையாகும்.

“பெரிய அறிவாளிப் புடுங்கீன்னு நெனப்பு உங்களுக்கு இல்லே...? போகியன்னிக்கு நீ பள்ளிக்கொடம் வப்பே நாந் எம் பையன அனுப்பனுமா? இந்த பாருங்கப்பா எனக்கு மதம், சாதியெல்லாம் மயிரு மாதிரி அடிப்படையில் நாங்க ஆதித்தமிழனுங்க. எங்களுக்கு ஒரேயொரு விழா இருக்குன்னா அது பொங்கல்தான்” (Gnanadiraviyam, 2019).

என்று சீறுவது நவநாகரீகக் கல்வி நிலையங்கள் பணம் கட்டிப் படிக்க வைக்கும் பல பெற்றோர்களின் மனக்குமுறலை ஆசிரியர் கூறுகின்றார். கல்வி என்பது இன்றைக்கு அரசியல் செயற்பாடும், அதிகாரமும் கொண்டதாக மாறிவருகிறது. ஒரு சிறிய தவறுக்காக கூட பள்ளியிலிருந்து நீக்குவது, அல்லது பெற்றோரை வரவழைத்துக் கடுமையாகப் பேசி அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவது போன்ற செயல்களில் இன்றளவும் சில தனியார் கல்வி நிறுவனங்கள் ஈடுபடுகின்றன. நண்பன் ஒருவன் வகுப்பில் செல்போன் எடுத்து வந்ததற்காக ஆசிரியர்கள் நடந்து கொண்ட அணுகுமுறை ஒரு கொலைக் குற்றவாளியை நடத்தப்படுவதுபோல மாணவனை நடத்துகின்றனர்.

கல்லூரி உதவிப் பேராசிரியரான அந்தத் தந்தை, தன் மகனுக்காகப் பரிந்து பேசப் பள்ளிக்கு அழைக்கப்பட்ட போது அவரது மன ஓட்டத்தை,

“தன் படிப்பு, அனுபவம், தான் பெற்ற பண்பாடு எதனையும் பிள்ளைக்குத் தர முடியாமல் போனதற்காகவும், கண்கூடாக ஒரு வெற்றிடம் தெரிந்தும் அதில் ஒரு கையளவு மண்ணையும் இட்டு நிரப்ப முடியாத தன் சூழலுக்காகவும் செலவிட்டுக் கட்டப்பட்ட அதிநவீனமான பள்ளியின் கேட்டில்

நின்று கொண்டிருந்தார்" என்று பதிவிட்டுள்ளார் ஆசிரியர் (Gnanadiraviyam, 2019). படிக்கும்போது பள்ளி என்பது மாணவர்களின் சிறைச்சாலையோ என இதனை எண்ணத் தோன்றுகிறது.

## முடிவுரை

ஒரு படைப்பால் எதையும் நிகழ்த்தி காட்டலாம். புதிய சமூகத்தையே உருவாக்கிவிடும் வல்லமை படைப்புகளுக்கு மட்டுமே உண்டு என்பதை இலக்குமிகுமாரன் ஞானதிரவியம் தன் சிறுகதைகள் மூலம் நிரூபித்து உள்ளார் என்பதை இக்கட்டுரைவழி அறியலாம். தான் ஒரு தேர்ந்த வாசகன் என்பதோடு மட்டுமன்றிச் சிறந்த எழுத்தாளன் என்பதையும் இவரது சிறுகதைகள் அடையாளப்படுத்தியுள்ளன. மேலும், அவர் கண்முன்னே நடப்பனவும், எதிர்கால சமூகம் எவ்வாறு கட்டமைக்கப்படும் என்பதை மிக எளிய நடையில் எழுதுயுள்ளமையும் காணமுடிகிறது. தன் வாழ்வை மட்டுமல்லாது தனக்கு ஏற்படும் அனுபவத்தை மிகச் சிறப்பாக ஆபூர்வமான 'நகர்சார் நாட்டார் கதைசொல்' என்பதன்வழி தெளிவுபடுத்தியுள்ளார். அவருடைய புனைவுவெளி சொல் கதையும், அழகியலும், அரசியலும் கலந்து வாசகனை நிறைவுகொள்ளச் செய்கிறது என்பது இவரது படைப்பாற்றலை தனித்து அடையாளப்படுத்திக் காட்டுகிறது.

## References


Gnanadiraviyam, Na. (2019Kazhalai (Chirukathai Thokuppu), New Century Book House, Chennai, India.

Poovannan, (2001) Tamil Ilakkiya Varalaru, Saiva chitthanta Noorpathippu Kalagam, Chennai, India.

Subbaiya, Aranga. (2006) Ilakkiyat Tiranaiyvu: Isankalum Kolkaikalum, Nalankilli Patippagam, Thanjavur, India.

Thiyagarajan, (2005) D. Chirudheiva Vazhipaattil Naattupurak Kurukal, Tamilaiyvu Valaithalam.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License